**<u>இந்தியக் குடியிருப்பாளர் அயல்நாட்டு நாணய (உள்நாட்டுக்) கணக்கு</u>**
**<u>இந்தியக் குடியிருப்பாளர் தனிநபர் வசதிகள்</u>**
**A.P. (DIR Series) சுற்றறிக்கை எண்.64 (டிசம்பர் 24, 2002)**

**பாரத ரிசர்வ் வங்கி**
**அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டுத்துறை**
**மைய அலுவலகம்**
**மும்பை 400 001**

**டிசம்பர் 24, 2002**

<u>A.P.(DIR Series) சுற்றறிக்கை எண் 64</u>

**அங்கீகரிக்கப்பட்ட அந்நியச் செலாவணி வர்த்தகர் அனைவருக்கும்**

அன்புடையீர்,

**<u>இந்தியக் குடியிருப்பாளர் அயல்நாட்டு நாணய (உள்நாட்டுக்) கணக்கு</u>**
**<u>இந்தியக் குடியிருப்பாளர் தனிநபர் வசதிகள்</u>**

A.P.(DIR Series) சுற்றறிக்கை எண்.53, நவம்பர் 23, 2002 தேதியிடப்பட்டதில் மற்றும் அறிவிப்பு எண். FEMA.74/ 2000 RB நவம்பர் 1, 2002 தேதியிடப்பட்டதின்படி இந்தியக் குடியிருப்பாளர் FED இந்தியக் குடியிருப்பாளர் அயல்நாட்டு நாணய (உள்நாட்டுக்) கணக்கினை சில குறிப்பிட்ட நோக்கங்களுக்காகப் பெற்ற அயல்நாட்டுப் பணம், வங்கிநோட்டுகள் பயணக்காசோலைகள் மூலம் ஆரம்பித்து கைக்கொண்டு நடத்திக்கொள்ளலாம். இந்த விவரத்தினை அதிகாரம் பெற்ற வணிகர்கள் கவனிப்பாராக.

2. மேற்குறிப்பிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்காகவோ அல்லது வகையிலோ மட்டுமின்றி அயல்நாட்டு நாணய (உள்நாட்டுக்) கணக்கு பின்வரும் வகையிலும் ஆரம்பித்து நடத்தப்படலாம். இயல்பான வங்கி வழியாகப் பெறப்பட்ட உறவினர்கள் (கம்பெனி சட்டத்தில் விவரித்துள்ளபடி) இடமிருந்து இந்தியக் குடியிருப்பாளரால் பெறப்பட்ட அன்பளிப்பு அல்லது வெகுமதித்தொகையிலிருந்தும் கணக்குகள் ஆரம்பிக்கப்படலாம். சரக்கு மற்றும் சேவை ஏற்றுமதி ராயல்டி(royalty) மற்றும் கௌரவச் சம்பளத்தொகையாலும் அந்தக் கணக்கு ஆரம்பிக்கப்படலாம்.

3. அறிவிப்பு எண் FEMA74/ 2000 RB நவம்பர் 1, 2002 தேதியிடப்பட்டது தேவைப்படும் திருத்தங்களுடன் தனியே வெளியிடப்படுகிறது.

4. இந்த சுற்றறிக்கையில் அடங்கியுள்ள விவரங்களைத் அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் தத்தம் குழு சார்ந்த முகவர்கள் கவனத்திற்குக் கொண்டு செல்வாராக.

5. இந்தச் சுற்றறிக்கையில் அடங்கியுள்ள கட்டளைகள் யாவும் FEMA 1999 (42 of 1999) ன் சட்டப்பிரிவு எண் 10(4) மற்றும் சட்டப்பிரிவு எண் 11(1)ன் கீழ் வெளியிடப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள

G. பத்மநாபன்
பொறுப்பிலுள்ள அதிகாரி